**சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்திட்டம் - 2018**

---

சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் முறையே கைச்சாத்திடப்பட்ட 2018 ஒக்தோபர் 26 ஆம் திகதியிடப்பட்ட 3227-எஸ்ஆர்ஜ(சீஓஎல்) மற்றும் 0618- எஸ்ஆர்ஜ(எஸ்எப்) ஆம் இலக்க கடன் மற்றும் மானிய உடன்படிக்கையில் உள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், குறிக்கோள்கள், நிதியிடல் மற்றும் காலப்பகுதி

---

கடன் மற்றும் மானிய உடன்படிக்கையின் பிரகாரம், சுகாதாரம் மற்றும் சுதேச மருத்துவ அமைச்சானது செயற்திட்டத்தின் நிறைவேற்றல் நிறுவனம் ஆனதுடன் மத்திய, வட மத்திய, சபரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களின் நான்கு மாகாண சபைகள் செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்கான நிறுவனங்கள் ஆகும். தரமான அத்தியாவசியமான சுகாதார சேவைகளுக்கு தொடர்ச்சியான கவனிப்பு மற்றும் உலகளாவிய அணுகுதலை வழங்குதல் என்ற கருத்தின் அடிப்படையில் ஆரம்ப மருத்துவ சிகிச்சை முறைமையின் வினைத்திறன், சமபங்கு மற்றும் பதிலழிக்கக்கூடிய தன்மை என்பவற்றை மேம்படுத்துதல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்கள் ஆகும். கடன் மற்றும் மானிய உடன்படிக்கையின் பிரகாரம், ரூபா 9,300 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 60 மில்லியன் தொகையான மதிப்பிடப்பட்ட மொத்த கிரயத்தில் , ரூபா 5,813 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 37.50 மில்லியனை கடனாகவும் மற்றும் ரூபா 1,937 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 12.50 மில்லியனை மானியமாகவும் வழங்குவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியால் உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2018 திசெம்பர் 01 இல் தொடங்கி இருந்ததுடன் 2,023 நவம்பர் 31 அளவில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

---

நிதிக்கூற்றுக்களானவை செயற்திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

---

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு

அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல்

வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது நான் அடையாளம் காணும் யாதேனும் உள்ளகக் கட்டுப்பாட்டில் உள்ள குறிப்பிடத்தக்க குறைபாடுகள் உட்பட , குறிப்பிடத்தக்க கனக்காய்வு கண்டுபிடிப்புக்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக ஆளுகைக்கு உட்பட்ட நபர்களுடன் நான் தொடர்பு கொள்கிறேன்.

## 2. பௌதீக செயலாற்றல்

### 2.1 செயல்திட்டத்தின் நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

| நடவடிக்கை | கணக்காய்வு பிரச்சினை | தாக்கம் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| பொருட்கள், வேலைகள் மற்றும் சேவைகளின் பெறுகைக்காக விலைமனுக்கள் கோரல் | செயற்திட்ட நிருவாக கையேட்டின் பிரகாரம், 135 மாகாண வைத்தியசாலைகளின் ஆரம்ப மருத்துவ சிகிச்சை முறைமையின் வினைத்திறன் சமபங்கு மற்றும் பதிலழிப்பு என்பவற்றை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் சம்பந்தப்படுத்தப் பட்டிருந்ததுடன் உபகரணம், தளபாடம் மற்றும் ஆலோசனை சேவை முதலியவற்றுக்கான 28 பெறுகை நடவடிக்கைகளின் விலைமனுக் கோரல்கள் 2018 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், ரூபா 181.35 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்ட கிரயத்தில் அலுவலக | பெறுகை நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதில் சாத்தியமான காலதாமதங்கள். | தேவைப்பாடுகளின் முன்னுரிமை, ஆரம்ப செயல் நடவடிக்கை திட்டங்கள் மற்றும் நிதிப்பாய்வுகள் போன்ற இவ்வாறான காரணங்கள் காரணமாக செயற்திட்ட நடைமுறைப்படுத்தல் கையேட்டின் பல பகுதிகளில் முக்கியமாக பெறுகை திட்டமானது அவ்வவ்போது திருத்தப்படுகின்றது. | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் வேலைகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கைகளை துரிதப்படுத்த வேண்டும். |

உபகரணம், தளபாடம் மற்றும் ஆலோசனை சேவைகளின் பெறுகைகள் மீதான 3 நடவடிக்கைகள் மாத்திரம் அந்த திகதியில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன.

## 2.2 ஒப்பந்த நிருவாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு பிரச்சனை | தாக்கம் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | ரூபா 4.89 மில்லியன் கிரயத்தில் தளபாடங்களை பெறுகை செய்வதின் மீது தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு நியமிக்கப்படவில்லை மற்றும் 03 வருடங்களுக்கு கோரப்பட்ட பிணை முறிக்கு பதிலாக தெரிவு செய்யப்பட்ட வழங்குனரிடம் இருந்து 01 வருட காலப்பகுதிக்கான செயலாற்றுகை பிணைமுறி பெறப்பட்டிருந்தது. | குறைந்த தரத்துடனும் பின்புறமான வாய்ப்புடனும் தளபாடத்தை வழங்கல் செய்வதற்கு இடமளித்த வழங்குனருக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகள். | பெறுகை நடவடிக்கைகளை தொடங்கும் நேரத்திலிருந்து செயற்திட்ட மேலாண்மை பிரிவு ஸ்தாபிக்கப் பட்டிருக்கவில்லை. | பயன்படுத்தப்படும் பெறுகை செயல்முறைகளின் வெளிப்படைத் தன்மையினை உறுதி செய்வதை அனுமதிக்கும் வகையில் அரச பெறுகை வழிகாட்டல்களின் நிர்ணயிக்கப்பட்ட தேவைப்பாடுகள் பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | ரூபா 15 மில்லியனுக்கு அதிகமான மதிப்பீட்டு கிரயத்துடனான பெறுகைகள் செயற்திட்ட பெறுகைகுழுவின் கீழான தேசிய போட்டி விலை மனுக்கோரலினை பின்பற்ற வேண்டி இருந்த போதிலும், பெறுகை வழிகாட்டியின் 2.14.1 இன் பந்திக் முரணாக, ரூபா 23.25 மில்லியன் | விலைமனுதாரர்க ளுக் கிடையிலான போட்டித் தன்மை உறுதிப்படுத்தப்பட வில்லை. | செயற்திட்டத்தின் ஆரம்ப பெறுகை திட்டத்தின் பிரகாரம், 5 வருட காலப்பகுதியின் போது செயற்திட்ட கண்காணிப்பு பிரிவிற்கும் செயற்திட்ட நடைமுறைப் படுத்தல் பிரிவுகளுக்கும் | பயன்படுத்தப்படும் பெறுகை செயல்முறைகளில் வெளிப்படைத் தன்மையினை உறுதி செய்வதை அனுமதிக்கும் வகையில் பெறுகை வழிகாட்டல்களின் நிர்ணயிக்கப்பட்ட தேவைப்பாடுகள் பயன்படுத்தப்பட |

| | | | |
|---|---|---|---|
| மதிப்பிடப்பட்ட கிரயத்தில் அலுவலக உபகரணங்கள் வாங்குதல் (Shopping) நடைமுறையை பின்பற்றி செயற்திட்டத்தால் பெறுகை செய்யப்பட்டிருந்தன. | | அலுவலக உபகரணங்களை பெறுகை செய்வதற்கும் அவ்வவ்போதான பெறுகைகளை பூர்த்தி செய்வதற்கும் எதிர்பார்க்கப் படுகிறது. எனவே, இந்த தொகுப்பின் கீழ் 2018 இல் செய்யப்பட்ட பெறுகையானது உச்ச வரம்பு தொகையை விட தாண்டி இருக்கவில்லை. | வேண்டும். |

## 2.3 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்

| கணக்காய்வு பிரச்சனை | தாக்கம் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) செயற்திட்ட மேலாண்மை பிரிவிற்காக அலுவலக இடத்தை பணிக்கமர்த்தல் செய்வதற்காக கேள்வி மனுதாரரின் கையொப்பம் இன்றி சமர்ப்பிக்கப்பட்ட விலைமனுவொன்று மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. மேலும், மேலே குறிப்பிடப்பட்ட நோக்கத்திற்காக அதே கேள்வி மனுதாரரால் 03 விலைமனுக்கள் மோசடியான முறையில் சமர்ப்பிக்கப்பட்டன என்று தெரியவந்தது. | மோசடியான கொடுக்கல் வாங்கலுக்காக இடமளிக்கப்பட்டது | கேள்வி மனுதாரரின் கையொப்பமின்றிய விலைமனுவானது வலிதான விலைமனு வொன்று அல்ல மற்றும் விலைமனு மதிப்பீட்டில் நிராகரிக்கப்பட வேண்டும். இந்த எடுத்துக் காட்டில் இந்த தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவானது (TEC) இவ்வாறான விலைமனுவை தவறுதலாக மேலும் மதிப்பீடு செய்வதற்கு கருத்திற் கொண்டது. | பயன்படுத்தப்படும் பெறுகை செயல்முறைகளில் வெளிப்படைத் தன்மையினை உறுதி செய்வதை அனுமதிக்கும் வகையில் பெறுகை வழிகாட்டல்களின் நிர்ணயிக்கப்பட்ட தேவைப்பாடுகள் பயன்படுத்தப்பட வேண்டும். |